2020 பிப்ரவரி 18]

என்கிறீர்கள். அதேபோன்று, இப்போது, KCC *மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கான பணிகள், தலைமைச் செயலாளர் அவர்களின் ஆலோசனையின்பேரில் துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, அனைவருக்கும் கடன் வழங்கப்படும். எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது. எல்லோருக்குமே, இன்றைக்கு மூன்று இலட்சத்து (குறுக்கீடுகள்) அந்தமாதிரி சொல்லமாட்டேன். பதில் பதிவு செய்துதான் ஆகவேண்டும். (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறாகக் கருதக் கூடாது. இதில், தவறான கடன் கொடுக்கக் கூடாது.* Society–*க்கு வாழ்வாதாரம் இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் சொல்கிறார்கள். உண்மையான விவசாயிகள் யாருக்கும் கடன் இல்லை என்ற நிலை எதிர்காலத்தில் வராது; இதில் எந்தவித அச்சமும் தேவையில்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

புதிய மின்பாதை

***36419—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், குத்தியாலத்தூர் ஊராட்சி, அணைக்கரை வழியாக புதிய மின்பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட தாளவாடி வட்டம், குத்தியாலத்தூர் ஊராட்சிக்கு அணைக்கரை வழியாக

புதிய மின்பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே, அதைச்சுற்றியிருக்கின்ற கிராமங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஏதாவது கேள்வியைத் தவறுதலாகக் கேட்டுவிட்டாரா என்று தெரியவில்லை. ஏனென்று சொன்னால், மின் பாதை இருக்கின்றது. மின்னிணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விளக்கமாகச் சொல்வார்களென்றால் அதற்குப் பதில் சொல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசைநோக்கி பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டங்களை நிறைவேற்றும்வகையில் தமிழக மக்களை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், குத்தியாலத்தூர் ஊராட்சி, அணைக்கரை வழியாக 30-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களைக் கொண்ட திங்களூர் ஊராட்சி, கேர்மாளம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளுக்கு மின்சாரம் வருகிறது. ஆனால், 20 கிலோ மீட்டர் தூரம் அடர்ந்த காட்டுப் பகுதி உள்ள ஆசனூர் பகுதி வழியாக அந்த மின்சாரம் வருகிறது. அந்தப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் சூறாவளிக் காற்றினால் மரங்கள் விழுந்து மின் ஒயர்கள் அறுந்து போவதால், மக்களுக்குச் சீரான மின்சாரம் வழங்க முடிவதில்லை. எனவே, இப்பகுதி மக்களுடைய நலன் கருதி, மிக அருகில் இருக்கிற அணைக்கரையிலிருந்து நேராக மேற்கண்ட இரண்டு ஊராட்சிகளுக்கும் சீரான மின்சாரம் வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதியில் உள்ள மல்லியம்மன்துர்கத்தில் 150 குடும்பங்களும், தாசன்தொட்டியில் 25 குடும்பங்களும், இராமர்அணையில் 20 குடும்பங்களும் உள்ளன. இப்பகுதிகளில்

2020 பிப்ரவரி 18]

நீண்ட காலமாக மின்சாரம் இல்லாமல் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். அதேபோல, பவானிசாகர் ஒன்றியம், சொக்கம்பாளையம் ஊராட்சி, வெற்றிவேல் நகர் பகுதியிலும், நந்திபுரம் பகுதியிலும் மின்சாரம் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். அப்பகுதிகளில் புதிய மின்பாதை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மின்பாதை வனப் பகுதியில் வருகின்ற காரணத்தினால் இயற்கைச் சீற்றத்தின் காரணமாக அடிக்கடி மின் பழுது ஏற்படுகின்றது. அதற்காக புதிய மின்பாதை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இப்போது பெரும்பள்ளம் Substation-லிருந்துதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் குக்கிராமங்களுக்கு மின் வசதி கொடுக்கப்பட்டு வருகின்றது. புதிய மின் பாதை அமைக்க வேண்டுமென்று சொன்னால் வனத் துறையிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணை இருக்கிறது. தேவைப்படின், வனத் துறையின் அனுமதியைப் பெற்று அந்தக் குக்கிராமங்களுக்குப் புதிய மின் பாதை அமைப்பதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4, 5 குக்கிராமங்களுக்கு மின் வசதி இல்லை என்று சொன்னார்கள். இதுகாறும் எங்கள் கவனத்திற்கு வரவில்லை. வனப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களாக இருந்தால், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அங்கே மின்னிணைப்புக் கொடுக்க முடியாத காரணத்தினால், சோலார் லைட் அமைக்கலாம் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகாறும் என் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. அப்படி இருப்பின், அது உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, சோலார் லைட் கொடுப்பதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருமயம் தொகுதிக்குட்பட்ட அரிமளம் மற்றும் தள்ளாம்பட்டி பகுதிகளில் 33 கே.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையங்களிலிருந்து விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஒரு நாளைக்கு 1 மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம்தான் மின்சாரம் வருகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அவர்களுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் கிடைப்பதற்கு, அந்த இரண்டு துணை மின் நிலையங்களையும் தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆத்தூரில் மின்மாற்றிகளில் overload இருப்பதனால், தினசரி shutdown ஆகிவிடுகிறது. ஒரு நாளைக்கு 10 முறை, 15 முறை அங்கே மின்தடை ஏற்பட்டுவிடுகிறது. எனவே, அந்த transformer–ஐ தரம் உயர்த்தித் தரவோ அல்லது புதிதாக இன்னொரு transformer–ஐ அமைத்துத் தரவோ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எனவே, அந்தப் பகுதி மக்களுக்குத் தடை இல்லாமல் மின்சாரம் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக டெல்டா மாவட்டங்களுக்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் தரப்படுகின்றது. காற்றாலை மின்சாரம் கிடைக்கும்போது 24 மணிநேரமும் மின்சாரம் தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மின் தடை ஏற்படுகின்றது என்கிறார். அதை ஆய்வு செய்கின்றோம். இன்னொன்று, ஆத்தூர் பகுதியிலே மின்மாற்றிகளில் அதிகப் பளு இருக்கின்ற காரணத்தினால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இதுகாறும் எங்களுக்கு அப்படித் தகவல் வரவில்லை. அதுகுறித்து

2020 பிப்ரவரி 18]

உடனடியாக ஆய்வு செய்து, அங்கேயிருக்கின்ற அதிகாரிகளிடம் பேசி அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

தொகுப்பு வீடுகள்

***50194—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், வீரமரசன்பேட்டை ஊராட்சியில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், வீரமரசன்பேட்டை ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகள் முழுவதும் சிதலமடைந்து பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் இவற்றைச் சீரமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*